DEPOSITION OF WITNESS

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்**

**CC.No.250/2025**

Prosecution **PW.1**

Court

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | தாமரை | கிராமம் : | |
| கணவர் பெயர் : | மணி | வட்டம் : | |
| மதம் : | | தொழில் : | |
| ஜாதி : | | வயது : | 60 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 03.02.2026
எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

1. நான் கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் வட்டம் கீழசிந்தலவாடியில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை சிவக்குமாரைத் தெரியும். இந்த வழக்கில் இறந்து போன மணி எனது கணவர் ஆவார். தேதி, மாதம் ஞாபகமில்லை. சுமார் 4 வருடங்களுக்கு முன்பு நானும் எனது கணவரும் ஆடுகளை ஓட்டிக்கொண்டு திருச்சி– கரூர் ரோட்டில் உள்ள சிந்தலவாடி மேம்பாலம் அருகே ஆடுகளை மேய்த்துக்கொண்டு ரோட்டின் ஓரமாக நின்று கொண்டிருந்த அப்போது அதே ரோட்டில் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி பைக்கில் 6770 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனம் வந்து எனது கணவர் மீது மோதி கை, கால், தலை, வாய் மூக்கு, காது ஆகிய இடங்களில் காயம் எற்பட்டது.

2. இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த நபரை நான் பார்த்தேன். ஆஜர் எதிரி தான் இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்தார். (சாட்சி நீதிமன்றத்தில் எதிரியை அடையாளம் காட்டினார்.) எனது கணவரை தனியார் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்துச்சென்றோம். பின்னிட்டு கரூர் GH க்கு அழைத்துச் சென்றோம். பின்னிட்டு மேல்சிகிச்சைகாக திருச்சி GH க்கு அழைத்துச் சென்றோம். விபத்து சம்பந்தமாக நான் லாலாப்பேட்டை காவல் நிலையத்தில்

புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். இந்த புகார் வாக்குமூலம் நான் தான் கொடுத்தேன். எனது கணவர் பேச முடியாமல் இருந்தார். ( **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** ) எனது கணவர் 5 நாட்கள் கழித்து இறந்துவிட்டார். போலிசார் என்னை விசாரித்தார்கள். விபத்திற்கு காரணம் ஆஜர் எதிரிதான் வேகமாக வாகனத்தை ஓட்டிவந்தார்.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**</u>

1. நான் கூலி வேலை செய்து வருகிறேன். எனது கணவர் ஆடு மேய்த்து வந்தார் என்றால் சரிதான் . அப்போது எத்தனை ஆடுகள் வைத்திருந்தார் என்றால் 10 ஆடு வைத்திருந்தார். எனக்கு எழுதப்படிக்கத் தெரியுமா என்றால் தெரியாது கையொப்பம் மட்டும் போடுவேன். போலிசார் விசாரணையின் போது இருசக்கர வாகன பதிவு எண். 6770 என்று மட்டும் சொன்னேன் என்றால் சரிதான். விபத்திற்கு பின்பு இருசக்கர வாகனம் நின்று விட்டதா அல்லது சென்றுவிட்டதா என்றால் போய்விட்டார்.

2. ஆஜர் எதிரியை தற்போது தான் நீதிமன்றத்தில் பார்க்கிறேன் என்றால் இல்லை அன்றைக்கே பார்த்தேன். இந்த சம்பவத்தை எத்தனை பார்த்தார்கள் என்றால் 5 அல்லது 6 பேர் பார்த்தார்கள். விபத்து நடந்த இடம் திருச்சி – கரூர் கிழமேல் ரோடு என்றால் சரிதான். எனது கணவர் எந்த பக்கம் ஆடு மேய்த்து கொண்டிருந்தார் என்றால் ரோட்டிற்கு வடபுறம் மேய்த்து கொண்டிருந்தார். எனது ஊர் ரோட்டிற்கு தென்புறம் உள்ளது. ரோட்டின் இடதுபுறம் இருசக்கர வாகனம் செல்வதற்கு கோடு போட்டுள்ளார்கள் என்றால் சரிதான். ஒரு பக்கத்தில் ஒரே நேரத்தில் இரு வாகனம் செல்லக்கூடிய ரோடு என்றால் சரிதான்.

3. விபத்து நஷ்டஈடு கேட்டு வழக்கு போட்டுள்ளோம் என்றால் சரிதான். ரோட்டின் இருபுறமும் மண் ரோடு உள்ளது என்றால் சரியல்ல கொஞ்சமாக உள்ளது. விபத்து நடந்த இடம் மண்ரோட்டில் நடந்தது. சாட்சி தமிழழகன், பார்த்திபன், எனக்கு என்ன உறவு முறை என்றால் உறவு முறை இல்லை ஒரே ஊரைச்சேர்ந்தவர்கள் , பக்கத்தில் குடியிருப்பவர்கள். விபத்திற்கு பின்பு எனதுகணவரை கரூரில் தனியார் மருத்துவமனையில் சேர்த்த பிறகு போலிசார் வந்தார்கள் என்றால் சரிதான். அப்போது எனது கணவர் பேச முடியாததால்

விபத்து எப்படி நடந்தது என்று கேட்டு எழுதி போலிசார் வாங்கி நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான்.

4. அதன் பிறகு போலிசார் என்னை விசாரித்ததார்களா என்றால் வீட்டில் வைத்து விசாரித்தார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று தெரியுமா என்றால் தெரியாது. போலிசாரிடம் வாக்குமூலம் கொடுக்கும் போது வண்டி ஓட்டி வந்த நபரின் பெயர், முகவரி சொல்லவில்லை என்றால் சரிதான்.

5. எனது கணவர் ஆட்டை ஓட்டுவதற்காக மண் ரோட்டில் நின்று கொண்டிருந்து திடிரென்று ரோட்டின் தென்புறத்தில் இருந்து வடபுறம் நோக்கி கிழக்கிலிருந்த வந்த இருசக்கர வாகனத்தை கவனிக்காமல் வந்து எதிரி ஓட்டி வந்த வாகனத்தின் மீது மோதி விபத்தை தழுவிக்கொண்டார் என்றால் சரியல்ல. விபத்திற்கு காரணம் எனது கணவர் என்றால் சரியல்ல. சம்பவம் நடக்கும் போது நான் சம்பவ இடத்தில் இல்லையென்றாலும் வீட்டில் இருந்து தகவல் கிடைத்து வந்து பார்த்தேன் என்றாலும் சரியல்ல.

6. நான் சம்பவ இடத்தில் நான் இருந்திருந்தால் நான் தான் தனியார் மருத்துவமனைக்கு எனது கணவரை அழைத்துச்சென்று சேர்த்திருப்பேன் என்றாலும் நான் சம்பவ இடத்தில் இல்லலாததததல்தான் ஆம்புலன்சில் கொண்டு சென்று தனியார் மருத்துவமனையில் சேர்த்தார்கள் என்றாலும் நான் சம்பவத்தை கேள்விப்பட்டும் கரூர் அரசு மருத்துவமனையில் தான் நான் போய் பார்த்தேன் என்றால் சரியல்ல. நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றாலும் வேறு யாரும் பார்க்கவில்லை என்றாலும் வழக்கிற்காக நேரில் பார்த்ததாக வழக்கை போட்டுள்ளார்கள் என்றால் சரியல்ல. விபத்து நஷ்ட ஈடு பெறுவதற்காக நடந்த சம்பவத்தை மாற்றி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை : இல்லை**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

RAMAIYAH BAGYARAJ

Digitally signed by RAMAIYAH BAGYARAJ
DN: cn=RAMAIYAH BAGYARAJ, ou=MADURAI, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.02.04 10:55:07 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணராயபுரம்.